அருணாவின்

# சித்தர்கள் வரலாறு



தமிழ்ப்பிரியன், MA., M.Phil.,

# முன்னுரை

சித்தம் என்பது மனம். கடிவாளம் இல்லாத குதிரையைப் போல கண்மூடித்தனமாகப் பாய்ந்து செல்லும் மனத்தை, யோகம், தவம் என்னும் கடிவாளம் இட்டு அதனைத் தன்வயப்படுத்தியவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர்.

சித்தர்கள் ஓரிடத்திலும் நிலையாக இல்லாமல் காடு, மலை, குகை என அலைந்த வண்ணம் இருப்பர். மலைக்குகையினுள் தவம் செய்வர். தாங்கள் செல்லும் ஊரில் உள்ள மக்களின் நோய்களைப் போக்கி, அவர்களை நல்வழிப்படுத்துவர்.

எட்டுவிதமான சித்திகளைப் (அட்டமா சித்திகள்) பெற்றவர்கள் இவர்கள். எட்டுவிதமான சித்திகள் பின்வருமாறு:

**1. அணிமா** - அணு போன்ற சிறிய உருவிலே உலவும் ஆற்றல்.

**2. மகிமா** - மலை போன்ற பெரிய உருவம் எடுத்து உலவும் ஆற்றல்.

**3.** இலகிமா - உடம்பை இலேசாகச் செய்து கொண்டு நீரின் மீதும், நிலத்தின் மீதும் கால்படாமல் காற்றுப் போல் விரைந்து செல்லும் ஆற்றல்.

**4.** கரிமா - ஐம்புலன்களின் ஆளுகைக்கு ஆட்படாமல் இருத்தல்.

**5.** பிராத்தி - தான் நினைத்ததை அடையும் ஆற்றல்.

**6.** பிராகாமியம் - தன் நினைப்பு வலிமையால் அனைத்தையும் படைக்கும் ஆற்றல்.

**7.** ஈசத்துவம் - காண்பவர் அனைவரும் தன்னை வணங்கும் தோற்றப் பொலிவு பெற்றிருத்தல்.

**8.** வசித்துவம் - உலகம் முழுவதையும் தன் வயப்படுத்தி நடத்தும் ஆற்றல் என்பனவாகும்.

சித்தர்கள் பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாயும்) என்னும் சித்தியும் பெற்றவர்கள். முக்காலமும் உணரும் ஆற்றலைப் பெற்றவர்கள். காய கற்பம் உண்டு, தங்கள் உடலை வலிமையாக்கிக் கொண்டவர்கள். சாகா நிலை பெற்றவர்கள். சித்தர்கள் எத்தகைய அரிய சித்திகளைப் பெற்றிருந்தாலும் அவற்றைத் தம் சுயநலத்துக்காக அவர்கள் பயன்படுத்தியதே இல்லை. மக்களின் நன்மைக்காகவே தங்களின் அரிய ஆற்றலை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சித்தர்கள் யோகம், ஞானம், மருத்துவம், வானவியல், சோதிடம், மந்திரம், ஜாலவித்தை போன்ற பல துறைகளிலும் வல்லவர்கள்.

Cpa college